**பாடம் - 19**

**الدرس التاسع عشر**

**நபிகளார் வரலாற்றிலிருந்து முக்கிய நிகழ்வுகளும், படிப்பினைகளும் (தொடர்ச்சி)**

**تابع مواقف وعبر من سيرته ﷺ**

**நபியவர்களின் நீதி** - நீதி என்பது நபியவர்கள் தம் விஷயத்திலும், தமது இறைவன், தம் மனைவியர், தமது உறவினர் இன்னும் அந்நியர், நண்பர், கூட்டாளி, ஒத்த கருத்தை உடையவர்கள், மாற்றுக்கருத்துக் கொண்டவர்கள் என அனைவ ருடனும் அவர்கள் நடந்து கொண்ட விதத்தில் இருக்கிறது. இவர்கள் அனைவருடனும் நபியவர்கள் நீதமாக நடந்து கொண்டார்கள். இன்னும் சொல்வதானால் அவர்களைப் பிடிவாதமாக எதிர்த்துக் கொண்டிருந்த அவர்களது எதிரிகளுடனும் கூட நபிகள் நாயகம் நீதமாக நடந்து கொண்டார்கள்.

சில பேர் நபிகள் நாயகத்தை விமர்சனம் செய்கிறார்கள். வேறு சிலர் அவர்கள் மீது தவறான குற்றச்சாட்டுகள் சுமத்தவும் செய்கிறார்கள். ஆனாலும் (அத்தகையவர்களுடன் பதில் நடவடிக்கையின் போது) நபிகள் நாயகம் நீதி தவறவில்லை! நீதி என்பது நபியவர்களிடம் நீங்காப்பண்பாக அமைந்திருந்தது. ஊரில் இருந்தபோதும் பயணத்தின் போதும் எல்லா நிலைகளிலும் நீதி அவர்களிடம் நிலைத்திருந்தது. தமது தோழர்கள் மத்தியில் பாகுபாடு காட்டுவதை அவர்கள் வெறுப்பார்கள். மாறாக அவர்களிடையே நேர்மையுடனும் சமத்துவத்துடனும் நடந்து கொள்வதையே விரும்புவார்கள். அவர்களைப் போல தாமும் கஷ்டங்களையும் சிரமங்களையும் தாங்கிக் கொள்வார்கள்.

இப்னு மஸ்வூத்(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: பத்ரு போர் நடந்த நாளில் நாங்கள் ஒரு ஒட்டகத்திற்கு மூவர் என்ற அடிப்படையில் பயணம் செய்தோம். நபிகள் நாயகத்துடன் அபுலுபாபா, அலீ பின் அபீதாலிப் ஆகிய இருவரும் ஒட்டகத் தோழராக இருந்தனர். நபிகள் நாயகத்தின் முறை வந்தபோது 'நீங்கள் ஒட்டகத்தில் அமர்ந்து வாருங்கள்ளூ உங்களுக்காக நாங்கள் நடக்கிறோம்' என இருவரும் கூறினர் 'நீங்கள் என்னை விட வலிமையானவர்களும் அல்லர் நான் உங்களை விட (இறைவனின்) கூலியில் தேவையற்றவனும் அல்லன்' என நபிகள் நாயகம் (ஸல்) கூறினார்கள்.

ஒரு முறை உஸைத் இப்னு ஹுளைர் என்ற தோழர் மக்களுடன் தமாஷாகப் பேசி, அவர்களை சிரிக்க வைத்துக் கொண்டிருந்தபோது நபி;கள் நாயகம்(ஸல்) அவர்கள் அவரது இடுப்பில் ஒரு குச்சியால் குத்தி விட்டார்கள். உடனே உஸைத், 'என்னை வேதனைப் படுத்திவிட்டீர்கள் அதனால் உங்களை நான் பழிவாங்க வேண்டும்' எனக் கூறினார். அதற்கு நபிகள் நாயகம், 'நீ பழிதீர்த்துக்கொள்' என்று அவரிடம் கூறினார்கள். அப்போது அவர், நீங்கள் என்னை குத்தும் போது நான் சட்டை அணிந்திருக்கவில்லை, ஆனால் (தற்போது) நீங்கள் சட்டை அணிந்துள்ளீர்களே!' என்றார். உடனே நபியவர்கள் தமது சட்டையைக் கழற்றினார்கள். உடனே உஸைத் நபிகள் நாயகத்தைக் கட்டியணைத்து முதுகில் முத்தமிட்டுவிட்டு 'அல்லாஹ்வின் தூதரே! நான் இதைத் தான் விரும்பினேன்' என்று கூறினார். (பார்க்க: அபூதாவூத்- 5224)

ஷரீஅத்தில் அல்லாஹ் ஏற்படுத்திய குற்றவியல் சட்டங்கள் முடக்கப்படுவதை நபியவர்கள் விரும்பாதவர்களாய் இருந்தார்கள். காரணம் மக்களிடையே நீதியை நிலைநாட்ட வேண்டும் என்பது தான். குற்றமிழைத்தவர் தன் உறவினராகவோ தனக்குப் பிரியமானவராகவோ இருந்தாலும் சரி. மக்ஸூம் கோத்திரத்தைச் சார்ந்த ஒரு பெண் திருடிய சம்பவத்தின்போது தமது பாசத்திற்குரியவரான உஸாமாவுடைய பரிந்துரையை நபியவர்கள் ஏற்கவில்லை. மாறாக 'மக்களே! உங்களுக்கு முன் சென்றவர்கள் அழிந்து போனதற்குக் காரணம் அவர்களில் செல்வாக்குமிக்கவன் திருடினால் அவனை விட்டுவிடுவார்கள். பலவீனன் திருடினால் அவனுக்குத் தண்டனை நிறைவேற்றுவார்கள் என்பது தான். அல்லாஹ்வின் மீது ஆணையாக! முஹம்மதின் மகள் பாத்திமா திருடினாலும் அவரது கையையும் வெட்டியே தீருவேன்' என்று கூறினார்கள்.